காம்கேர் கே. புவனேஸ்வரி




**கொ**ரோனாவுக்கு முன் (கொ.மு) கொரோனாவுக்கு பின் (கொ.பி) என நம்முடைய வாழ்க்கை முறையைப் பிரித்துக் கொள்ளலாம் என்ற அளவுக்கு எல்லாமே தலைகீழாக மாறிவிட்டது.

கொரோனாவுக்கு முன்பு 'வீட்டில் இருந்தே வேலை' - Work From Home என்ற கான்செப்ட்டை நம் மக்களுக்குப் புரியவைப் பதற்கு மிகக் கடினமாக இருந்தது. வீட்டில் இருந்தே வேலை என்பது ஐ.டி. துறையில் பல காலங்களாக அமெரிக்கா போன்ற நாடுகளில் பயன்பாட்டில் இருந்து வந்தாலும் நம் நாட்டில் இப்போதுதான் அதிகமாகி உள்ளது.

கொரோனாவுக்கு பின், இன்று ஐடி துறை மட்டுமில்லாமல் பலரும் வீட்டில் இருந்தே பணிபுரியும் Work From Home திட்டத்துக்குப் பழகிவிட்டனர். பணிபுரிபவர்கள் மட்டுமல்ல, பள்ளி கல்லூரி மாணவ மாணவிகளுக்கும் ஆன்லைன் கல்விக்கு மாறிவிட்டனர்.

காய்கறி, மளிகைப் பொருட்கள் வாங்குவது, ஹோட்டல் உணவுகளை வீட்டுக்கே வரச்செய் யும் சர்வீஸ்கள், உடைகள் வாங்குவது, வீட்டுக் குத் தேவையான பொருட்களை வாங்குவது என அனைத்துமே இன்று ஆன்லைனில் தான்.

**இ**வை அத்தனையும் எப்படி சாத்திய மானது? நம் மொபைல் போன்களில் நம் விரல் நுனியால் நாம் தட்டி எழுப்பும் ஆப்கள் செய்யும் அதிசயங்கள் இவை.

அதன் தாக்கம் பத்திரிகை துறையினரையும் விட்டு வைக்கவில்லை. வாசகர்களையும் அச்சுப் புத்தகங்களை ஆன்லைனில் வாசிக்கும் வழக்கத்துக்குப் பழக்கியுள்ளது என்றே சொல் லலாம். அச்சுப் புத்தகங்கள் வாசிப்பதைப் போல எளிதானதே பத்திரிகைகளை ஆன் லைனில் வாசிப்பதும்.

அச்சுப் புத்தகங்களில் உள்ள பக்கங்களை கைகளால் திருப்பி படிப்போம். தேவையான இடத்தில் புக்மார்க் வைத்துவிட்டு பின்னர் அங் கிருந்து படிக்கத் தொடங்குவோம். எந்தப் பக்கம் வேண்டுமோ அதைக் கிழித்துச் சேகரித்து வைப்போம். பின்னர் தைத்து பைண்டிங் செய் வோம். அச்சுப் புத்தகங்களை நேரடியாக கைகளில் பிடித்து வாசிக்கும்போது இருந்த இப்படியான செயல்பாடுகளை ஆன்லைனில் இ-புத்தக மாக படிக்கும்போதும் செய்யலாம். அதை விட எளிதாகவே செய்ய முடியும். என்ன கொஞ்சம் பழக வேண்டும். அவ்வளவுதான்.



(புடைவையே கட்டிக்கொண்டிருந்தவர்கள் முதன் முதலில் சுடிதார் போட்டுக் கொள்ளும் போது எப்படிக் கொஞ்சம் அசௌகர்யமாக உணர்வார்களோ அப்படித்தான்.)

தொடர்ந்து ஓரிரு வாரங்கள் இ-புத்தகங்களை வாசித்துப் பழகினால், அச்சுப் புத்தகங்களை வாசிப்பதற்கு இணையான சுவாரஸ்யத்தைப் பெற்றுவிட முடியும். மனதளவில் ஒரு கம்பீரத் தையும் உணர முடியும். தன்னம்பிக்கையும் உண்டாகும். இன்றைய தலைமுறையினருடன் இணைந்து பயணிக்கும் பக்குவமும் கிடைக் கும். தலைமுறை இடைவெளி



வாசிக்கலாம். லேப்டாப்புடன் மற்றொரு பெரிய மானிட்டரை இணைத்துக்கொண்டு பெரிய திரையில் வாசிக்க முடியும். இவ் வளவு ஏன் இணைய வசதி இருந் தால் ஸ்மார்ட் டிவி திரையில் கூட பத்திரிகைகளை வாசிக்க முடியும். பத்திரிகைகள் மட்டுமில்லாமல் யு-டியூப் சேனல்கள், ஃபேஸ்புக், டிவிட்டர் போன்றவற்றையும் பெரிய திரையில் கையாள முடியும்.

பத்திரிகைகளை கையடக்க மொபைலிலும் வாசிக்க முடியும். அடிப்படையில் மொபைலில் ஆண்ட்ராய்ட் மற்றும் ஐபோன் என இரண்டு வகைகள் உள்ளதல்லவா? ஆண்ட்ராய்டாக இருந்தால் கூகுள் குரோம் பிரவுசரையும், ஐபோனாக இருந்தால் சஃபாரி என்ற பிரவுசரையும் பயன் படுத்தலாம். அவை மொபைலின் ஹோம் பேஜிலேயே இருக்கும். பிரவுசர் என்பது இணையத்தில் பயணிக்க உதவும் ஒரு டூல். இதன் மூலம்தான் இணையத்தில் வெப்சைட்டுகளில் உலா வர முடியும். யு-டியூப் சேனல்களையும், ஆடியோ சேனல்களையும் இன்ன பிற வசதிகளையும் அனுபவிக்க முடியும்.

மொபைலைப் போலவே இணையவசதி உள்ள ஐபேட், டேப்லெட் போன்றவற்றிலும் வெப்சைட்டுகள், யு-டியூப் சேனல்கள் என அனைத்து வசதிகளையும் பயன்படுத்தமுடியும்.

**ப**த்திரிகைகள், ஆடியோ, வீடியோ சேனல்கள் என அனைத்துமே வெப்சைட்டுகளாகவே இணையத்தில் வடிவமைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு வெப்சைட்டுக்கும் ஒரு முகவரி இருக்கும். அதற்கு வெப்சைட் முகவரி என்று பெயர். அவை http:// என்றும், https:// முன் அடையாளத்துடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கும். உதாரணம்: https://www.youtube.com>.

இதில் www என்றிருப்பது வெப்சைட்டின் முதல் பகுதி, அதைத் தொடர்ந்திருப்பது வெப்சைட்டின் பெயர் (youtube). டொமைன் பெயர் என்றும் சொல்வார்கள். அதைத் தொடர்ந்திருப்பது வெப்சைட்டின் கடைசிப் பகுதி (com). இந்த மூன்று பகுதியும் டாட் என்ற புள்ளியினால் பிரிக்கப்பட்டிருக்கும்.

குறைவதற்குக் கூட பெரிய அளவில் வாய்ப்புள்ளது.

அலமாரிகளிலும், பரண்களிலும், அட்டைப் பெட்டிகளிலும் இடத்தை அடைத்துக்கொண்டு கிடக்க, அவற்றை அடுக்கி, தூசி தட்டி, அவ்வப்பொழுது அடுக்கும் வேலை இனி இல்லை.

ஆன்லைனில் அத்தனையும் தேதி வாரியாக, மாதம் வாரியாக, வருடம் வாரியாகப் பிரித்து மிக சுலபமாகத் தேர்ந்தெடுத்துப் படித்துப் பார்க்கும்படி சேகரித்து வைக்கப்பட்டிருக்கும்.

ஆன்லைனில் பத்திரிகைகளையும் செய்தித் தாள்களையும் புத்தகங்களையும் வாசிப்பது மிகவும் சௌகர்யமான வசதி. முக்கியமான விஷயம் அச்சுப் புத்தகங்களை இரவல் கொடுத்தால் திரும்ப வரவில்லையே என்று கவலைப் படுகின்ற சமாச்சாரம் எல்லாம் ஆன்லைனில் இ-புத்தகங்களில் இல்லவே இல்லை. யாரும் கடன் கேட்க முடியாது. பக்கம் கிழிந்து போய் விடுமோ, கசங்கிப் போய் விடுமோ, காணாமல் போய்விடுமோ என்கின்ற தேவையில்லாத கவலைகள் ஆன்லைனில் வாசிக்கும்போது கிடையவே கிடையாது. இனி தடித்தடி புத்தகங்களைச் சுமக்கவேண்டியிருக்காது. பாதுகாக்க வேண்டிய கஷ்டமும் இருக்காது. இடத்தை அடைத்துக்கொள்ளும் என்கின்ற கவலையும் கிடையாது. எத்தனை புத்தகங்கள் என்றாலும் அது உங்கள் லேப்டாப்பின் எடை தான். சுமக்கும் வலியெல்லாம் கிடையவே கிடையாது.

**ஆ**ன்லைன் என்பது இணைய வசதி இருக்கும் எந்த சாதனத்திலும் படிக்க உதவும் ஒரு வசதி. லேப்டாப் அல்லது டெஸ்க்டாப்பில்

கூகுள் குரோம், ஃபயர் ஃபாக்ஸ், இன்டர்நெட் எக்ஸ்புளோரர் என இணையத்தில் பயணிக்க உதவும் வெப்பிரவுசர்கள் மூலம் வெப்சைட்டின் பெயரை டைப் செய்து பயன் பெறலாம். இவை பஸ், ரயில், விமானம் போல இணையத்தில் பயணிக்க உதவும் இணைய வாகனங்கள் எனலாம்.

வெப்சைட் முகவரிகள் என்பது ஆதம்பாக்கம், வேளச்சேரி, குரோம்பேட்டை என ஊர்களின் பெயர்கள் போல இணையத்தில் சென்றடைய வேண்டிய இடங்களின் பெயர்.

வெப்பிரவுசர்களில் வெப்சைட்டின் பெயரை டைப் செய்துவிட்டால் அவை நாம் சென்றடைய வேண்டிய வெப்சைட்டுக்கு கண் இமைக்கும் நொடிப்பொழுதில் கொண்டு சேர்த்துவிடும்.

**அ**துசரி http-க்கும் https-க்கும் என்ன வித்தியாசம் என நீங்கள் கேட்பது எனக்குப் புரிகிறது. https என்பது மிகவும் பாதுகாப்பான வெப்சைட் (Secured website). இதுபோன்ற முன் அடையாளத்துடன் வடிவமைக்கப்பட்டிருக்கும் வெப்சைட்டுகளில் நீங்கள் கொடுக்கும் யூசர் நேம், பாஸ்வேர்ட், டெபிட் கிரெடிட் கார்ட் எண்கள், நெட் பேங்கிங் பாஸ்வேர்டுகள் போன்றவை பாதுகாப்பாக கையாளப்படும். வங்கியின் வெப்சைட்டுகள் https:// என்றே தொடங்கப்பட்டிருப்பதை கவனிக்கலாம். கல்கி வெப்சைட்டும் https:// என்று தொடங்கப்பட்டிருக்கும் பாதுகாப்பான வெப்சைட்டே. இப்படிப் பாதுகாப்பு செட் டிங்கை பெறுவதற்கு அந்தந்த வெப்சைட்டின் உரிமையாளர்கள் சிறப்புக் கட்டணம் செலுத்தி சர்ட்டிஃபிகேட் பெற்றிருப்பார்கள். அப்போதுதான் வெப்சைட்டுகளுக்கு முன் https:// என்பதை பயன்படுத்த முடியும்.

வெப்சைட்டுகள் இந்தப் பாதுகாப்பு வசதியைப் பெற்றிருந்தால் அந்த வெப்சைட்டுகளின் முன் பூட்டு குறியூடு வெளிப்படும்.

அதைத்தொடர்ந்து www என குறிப்பிடப்பட்டிருப்பது World Wide Web என்பதன் சுருக்கம். அதைத்தொடர்ந்திருப்பது வெப்சைட் முகவரி. அதைத்தொடர்ந்து வெளிப்படும் .com,.org போன்றவை இணையதளத்தின் தன்மையை குறிக்க உதவும் கடைசிப் பகுதி. .com என்பது வியாபார நிறுவனங்கள் என்பதை குறிப்பதற்காக கமர்ஷியல் என்பதையும், .org என்பது சேவை நிறுவனங்கள் என்பதை குறிப்பதற்காக ஆர்கனைசேஷன் என்பதையும் அறிவுறுத்தவும் பயன்படுத்தப்படுகிறது. இது போல .in, .co.in, .us என இன்னும் பல கடைசிப் பகுதி குறியூடுகள் உள்ளன.

நாம் வெப்சைட் முகவரியை டைப் செய்தாலே அதற்கு முன் https:// மற்றும் www போன்றவை தானாகவே வெளிப்படும். ஒவ்வொரு முறையும் பிரவுசரில் நாம் <https://www. என ஆரம்பித்து டைப் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. உதாரணத்துக்கு youtube.com என டைப் செய்தாலே <https://www.youtube.com> என்பது வெளிப்பட்டு அந்த வெப்சைட்டுகள் நம்மை அழைத்துச் செல்லும்.




**இ**ணைய வசதியை பயன்படுத்த கட்டணம் செலுத்தி ஒரே ஒரு இன்டர்நெட் இணைப்பை வாங்கி வைத்துக்கொண்டால் அதை லேப்டாப், டெஸ்க்டாப், மொபைல், ஐபேட், டேப்லெட், ஸ்மார்ட் டிவி என அனைத்திலும் ஷேர் செய்து பயன்படுத்திக்கொள்ளலாம். ஒவ்வொரு சாதனத்துக்கும் தனித்தனியாக வாங்க வேண்டிய அவசியம் இல்லை.

அடுத்த இதழில் வெப்சைட்டுக்கும் ஆப்புக்கும் என்ன வித்தியாசம் என தெரிந்து கொள்வோமா?

**(முன்னேறுவோம்)**